1973 நவம்பர் 23]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக்குழுவில் பேசப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். நான் அலுவல் ஆய்வுக் குழுவில் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த ஆங்கில சொற்றொடரைப் புரிந்து கொள்ளாமல், தன்னைத்தான் சொன்னார் என்று யாராவது எடுத்துக் கொண்டால், அதற்காக நான் அந்த வார்த்தைகளை அங்கே சொன்னேன். முனு ஆதி அவர்கள் அப்படிச் சொல்லட்டும். முனு ஆதி வந்து சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட உறுப்பினரைப் பற்றியது அல்ல இது. ஒரு உறுப்பினர் வருத்தம் இருப்பதாகத் தெரிவித்தாலும் வருத்தம் தெரிவிப்பதாகச் சொன்னீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : திரும்பவும் சொல்கிறேன், நான் இந்த அவையின் கௌரவத்தைக் குலைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. நிச்சயமாக அப்படிச் சொல்லமாட்டேன் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர் 'இடிய'-த்தைப் புரிந்து கொள்ளவில்லையென்றால், என்று சொல்கிறார்கள். There is an insinuation. We cannot tolerate it. What is that idiom ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேரவைத் தலைவர் அனுமதியில்லாமலே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

இந்த உரிமை மீறல் பிரச்னை மீது, என்னுடைய தீர்ப்பை நான் நாளை தெரிவிக்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சென்னை, இராயபுரம் கல்மண்டபத்துக்கருகில், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினார்கள் எனச் சொல்லப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, அவர்கள் 'The Police lathi charge on 20th November 1973 on 5,000 strong high school students' procession near Kalmandapam, Royapuram, Madras injuring several students and consequent unrest. The procession is at the call of the Tamil Nadu Students Federation to cancel the S.S.L.C. Examination fees'.

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எவ்வாறு உகந்தது என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழ்நாடு மாணவர் மன்றம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு 30 ரூபாய் கட்டுவதை நிறுத்தவேண்டு மென்று 20-ம் தேதி தமிழ்நாடு பூராவும் உள்ள ஹைஸ்கூல் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டுமென்று திட்டமெடுத் திருந்தார்கள். அந்த முறையில் தமிழ்நாட்டிலே 20-ம் தேதி ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. அந்த முறையில் சென்னையிலும் 20-ம் தேதி காலை தியாகராய செட்டியார் உயர்நிலைப்பள்ளி, எத்தியப்பா நாய்க்கர் பள்ளி, பி.ஏ.கே. பழனிசாமி நாடார் உயர் நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் 5,000 பேர் ஊர்வலமாக வந்தபோது போலீசார் தலையிட்டு, ஊர்வலத்தை உடைத்து, அவர்களைக் கலைக்க தடியடிப் பிரயோகம் நடத்தியிருக் கிறார்கள். மாணவர் தலைவர்கள் ஜான், செல்வராஜ், போன்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களைத் தாக்கியிருக்கின்றனர். அது மட்டு மல்லாமல், கமிஷனரே மாணவர்களைத் தாக்கியது தவறு என்று கூறியிருக்கிறபோது, அரசே அதிலே எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட அமைச்சர், போலீஸ் அமைச்சர் அதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை, அல்லது ராசினாமா போன்ற நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும் கோரிக்கைகள் கிளப்பியிருக்கிறார்கள். இன்றைக்கு நாடு பூராவிலும் உள்ள மாணவர்கள் தொடர்ந்து ஊர்வலங்கள் நடத்தி வருகிறார்கள். அவர்களைத் தாக்குகிறபோது ஹைஸ்கூல் மாணவர்களுக்கு என்னடா கோரிக்கை என்று கூறி தாக்கியதாகச் சொல்கிறார்கள். இந்த சென்னை நகரத்தில் அது நடைபெற்று இருக்கிறது. இதை யெல்லாம் பார்க்கிறபோது இந்த அரசாங்கம் இந்த மாதிரியான நிகழ்ச்சிகளை நடக்கவொட்டாமல் தடுக்கத் தவறி விட்டது என்ற காரணத்திற்காக, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 15—11—1973 பிற்பகல் தனியார் பள்ளியான "எத்தியப்பா நாயக்கர் பள்ளி" வட சென்னையில் இருப்பது. அந்தப்

பள்ளி உள்விவகாரம் காரணமாக மூடப்பட்டது. மேற்படி பள்ளியிலே வேலை பார்த்து வந்த பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பள்ளி நிர்வாகத்தால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர் கல்வித் துறைக்கு முறையீடு செய்து கொண்டதன் பேரில் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, அவர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இதன் காரணமாக, தற்காலிகமாக அவரது இடத்திலே வேலை பார்த்து வந்த மற்றொரு ஆசிரியர் வேலை இழக்க நேரிட்டது. இதைத் தொடர்ந்து சில மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமலும் பள்ளியின் மரச் சாமான்களுக்கு சேதம் விளைவித்தும் நிர்வாகத்தினருக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர். அதனால் நிர்வாகத்தினர் 15—11—1973 முதல் பள்ளிக் கூடத்தை மூடிவிட்டனர்.

19—11—1973 அன்று மறுபடியும் பள்ளி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் பள்ளிக்கு குறிப்பிட்ட அளவுக்கு மாணவர்கள் வரவில்லை. குறிப்பிட்ட சில மாணவர்களே வந்தார்கள்.

20—11—1973-ம் தேதி அன்று அப்பள்ளியைச் சேர்ந்த 50 மாணவர்கள், இராயபுரம் எஸ். என். செட்டித் தெருவிலிருந்து நடராஜன் என்பவர் தலைமையில் ஊர்வலமாகப் புறப்பட்டார்கள். அனைத்திந்திய மாணவர் சம்மேளனத்தைச் சார்ந்தவர்கள் இதிலே இருந்தார்கள். ஊர்வலத்தினர் சென்னை ஆட்சியாளர் அலுவலகத்திற்குச் சென்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணமான ரூ. 15-ஐ ரத்து செய்ய வேண்டுமென்றும், மேலும் சுகாதார வசதியும், விளையாட்டு மைதான வசதியும் செய்து தரவேண்டுமென்றும் கோஷம் போட்டார்கள். ஊர்வலத்தில் தலைமையேற்று வந்து திரு. நடராஜனும் சில மாணவர்களும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சென்னை மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்து விட்டுத் திரும்பினர்கள்.

காலை 10 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் பிற்பகல் 12 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் முடிவடைந்தது. ஊர்வலம் மிகவும் அமைதியாகவும், ஒழுங்காகவும் நடைபெற்றது.

இதில் போலீசார் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய சூழ்நிலையோ, அவசியமோ ஏற்படவில்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 23

இது தவிர, வட சென்னை சி. ஏ. சாலையிலுள்ள கே. சி. சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்கள் 20-ம் தேதி அன்று காலை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கோஷம் எழுப்பி, அமைதியாக அவர்களும் சென்றார்கள். பள்ளிக்கூடம் அன்றைக்கு விடுமுறை என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, அருகாமையிலுள்ள பி.ஏ.கே. பழனிசாமி நாடார் உயர்நிலைப்பள்ளிக்கும் விடுமுறை என்று அதன் தலைமை ஆசிரியர் அறிவித்தார். மாணவர்கள் அமைதியாக திரும்பி வீடு சென்றனர்.

மேலே குறிப்பிட்ட சங்கரலிங்க நாடார் பள்ளி மாணவர்களோ, பி.ஏ.கே. பழனிசாமி நாடார் உயர்நிலைப் பள்ளி மாணவர்களோ ஊர்வலங்களில் கலந்து கொள்ளாமல் வீட்டிற்கு சென்றார்களே தவிர, வேறு எங்கும் செல்லவில்லை. ஆகவே, அவர்கள்மீது தடியடிப் பிரயோகம் நடைபெறவில்லை. மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல் 5,000 மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் நடைபெறவில்லை. அவர் தந்தது உண்மைக்குப் புறம்பான தகவல், தவறான தகவல். இப்பொழுது உண்மையான தகவல் தரப்பட்டிருக்கிறது. தடியடிப் பிரயோகம் எதுவும் நடைபெறவில்லை. ஆகவே, இப்படி நடைபெறாத ஒன்றிற்காக இந்த சபையை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகும், இது அன்றாட நிகழ்ச்சிக்குரிய காரணத்தினாலும் இதற்கு அனுமதி ம- மறுக்கிறேன்.

(ஆ) கிளைவ் விடுதி மற்றும் பாளையங்கோட்டை சம்பவ அறிக்கைகளின்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முதலமைச்சரைக் காணவந்த கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. பொன்னப்ப நாடார், டாக்டர் ஹாண்டே, திரு. மாரிமுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சுரேந்திரன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள்